பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (16-3-1995) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-09 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

41. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் தலைவராக டாக்டர் டி. பாலசுப்பிரமணியம் அவர்களை 15-7-1994-ஆம் தேதி முற்பகலிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்கு நியமிப்பது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 18-7-1994-ஆம் நாளிட்ட 495-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

42. 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் ஒழுங்குமுறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 30-9-1994-ஆம் நாளிட்ட 604-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலச் (உச்சவரம்பு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978)47(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

43. 1993-94-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டறிக்கை [1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125(2) (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

44. 1993-94-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் ஆண்டுக் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41 பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

[1995 மார்ச் 15

45. 1993-94-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

46. 1993-94-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

7. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் 1993-94-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

8. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்தொன்பதாவது அறிக்கை, 1994-95.

9. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பதாவது அறிக்கை, 1994-95.

10. மனுக்கள் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை, 1994-95.

11. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்திரண்டாவது அறிக்கை, 1994-95.

12. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து மூன்றாவது அறிக்கை, 1994-95.

13. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து நான்காவது அறிக்கை, 1994-95.

14. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்தைந்தாவது அறிக்கை, 1994-95.

15. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்தாறாவது அறிக்கை, 1994-95.

16. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்தேழாவது அறிக்கை, 1994-95.